**REVISED**

**செ.வெ.எண்:649** **நாள்:01.08.2010**

**சென்னை*யில்* குடிசைவாழ் மக்களுக்கு வாழ்வாதார பாதிப்பின்றி**

**மாற்றுக் குடியிருப்புகள் வழங்கப்படுகின்றன.**

**தமிழ்நாடு குடிசைமாற்று வாரியம் விளக்கம்!**

ஒருசில எதிர்க்கட்சிகள் – குடிசைவாழ் மக்களுக்கு எவ்வித முன்னறிவிப்பும் கொடுக்காமல் குடிசைகளை அகற்றுவதாகவும்; குடிசைவாழ் மக்களின் மேம்பாட்டிற்காக தொடங்கப்பட்ட குடிசைமாற்று வாரியம் தற்போது குடிசை அகற்றும் வாரியமாகச் செயல்படுவதாகவும் குறை கூறுகின்றன.

தமிழ்நாடு குடிசை மாற்று வாரியமே 1971ஆம் ஆண்டில் முதலமைச்சர் கலைஞர் அவர்களால் தொடங்கப்பட்டதுதான் என்ற உண்மையை மறைத்தும், மறந்தும் சிலர் அறிக்கை வெளியிடுகின்றனர்.

தி.மு.க. ஆட்சியில் தொடங்கப்பட்ட குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 18 ஆண்டுகளில் இதுவரை 66 ஆயிரத்து 636 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டப்பட்டிருக்கின்றன. ஆனால், அ.தி.மு.க. ஆட்சியில் இருந்த 20 ஆண்டுகளில், 38 ஆயிரத்து 364 குடியிருப்புகள் மட்டுமே கட்டப்பட்டன என்ற உண்மையினை குடிசைவாழ் மக்கள் நன்கு அறிவார்கள்.

முதலமைச்சர் கலைஞர் ஐந்தாவது முறையாக ஆட்சிப் பொறுப்பேற்றவுடன் தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தின் மூலமாக 82 ஆயிரம் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டது. அவற்றில் 27 ஆயிரத்து 373 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடிக்கப்பட்டு, குடிசைவாழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன; 19 ஆயிரத்து 277 அடுக்குமாடிக் குடியிருப்புகளை வரும் டிசம்பர் மாதத்திற்குள் முடித்து குடிசைவாழ் மக்களுக்கு வழங்கிட வேண்டும் என்னும் நோக்கத்தோடு முழுவீச்சில் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன; 35 ஆயிரத்து 495 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான கட்டுமானப் பணிகள் தொடங்கப்படவுள்ளன.

சென்னை மெரினா பகுதி குடிசைகளைப் பொறுத்தவரை 5,854 அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டு; நொச்சி நகர், நொச்சிக் குப்பம் ஆகிய பகுதிகளில் 1,452 அடுக்குமாடிக் குடியிருப்புகளுக்கான பணிகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதிகளில் இருந்த குடிசைவாழ் மக்கள் அவர்களாகவே முன்வந்து தாங்கள் குடியிருந்து வந்த பழைய பழுதடைந்த குடியிருப்புகளை குடிசைமாற்று வாரியத்திடம் ஒப்படைத்தனர். இந்த இரண்டு பகுதிகளிலும் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டி முடித்து குடிசைவாழ் மக்களுக்கு ஒப்படைத்ததும்; டொமிங் குப்பம், பட்டினப்பாக்கம், சீனிவாசபுரம் ஆகிய பகுதிகளில் உள்ள குடியிருப்புதாரர்கள் தாங்கள் குடியிருந்து வரும் பழைய குடியிருப்புகளை, குடிசைமாற்று வாரியத்திடம் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒப்படைப்பதாக உறுதி அளித்துள்ளனர். எனவே, நொச்சி நகர், நொச்சிக் குப்பம் பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணிகள் முடிந்து பயனாளிகளிடம் ஒப்படைத்ததும் இரண்டாவது கட்டமாக அடுத்தடுத்துள்ள பகுதிகளில் அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டும் பணி மேற்கொள்ளப்பட உள்ளது.

குடிசைமாற்று வாரியம் கட்டும் ஒரு குடியிருப்பின் கட்டுமானப் பரப்பைப் பொறுத்தவரை அ.தி.மு.க. ஆட்சியில் ஒக்கியம் துரைப்பாக்கம் பகுதியில் 155 சதுர அடி, செம்மஞ்சேரி பகுதியில் 217 சதுர அடி என்று

கட்டியதற்கு மாறாக; தற்போது தி.மு.க. ஆட்சியில் ஒரு குடியிருப்பின் கட்டுமானப் பரப்பு 270 சதுர அடியிலிருந்து 390 சதுர அடி வரை இருக்குமாறு பணிகள் நடைபெற்று வருகின்றன. எனவே, குடிசைமாற்று வாரியக் குடியிருப்புகள் ஒவ்வொன்றும் 100 சதுர அடி பரப்புதான் என்று ஒருசில எதிர்க்கட்சிகள் கூறுவது முற்றிலும் உண்மைக்குப் புறம்பானதாகும்.

சென்னை துறைமுகம் – மதுரவாயல் உயர்மட்டச் சாலை என்பது சென்னை துறைமுகத்திற்கு சரக்குகள் விரைவாகச் செல்வதற்காக மத்திய அரசால் திட்டமிடப்பட்டதாகும். கூவம் கரையில் குடிசைகளில் வாழும் 7 ஆயிரத்து 400 குடும்பங்களும் குடிசைமாற்று வாரியத்தால் முறையாகக் கணக்கெடுப்பு செய்யப்பட்டு; அவர்கள் அனைவருக்கும் அடையாள அட்டைகள் வழங்கப்பட்டு; அவர்களுக்குத் தகுந்த மாற்று இடங்களில் உடனடியாக குடியிருப்பு வழங்கவும் அல்லது அவர்கள் விரும்பும் இடங்களில் குடியிருப்பதற்கு வாடகைத் தொகையாக ஒவ்வொரு மாதமும் அரசே ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கவும்; மாற்று இடங்களுக்கு குடிபெயர்வதற்கு ஆகும் செலவுகளுக்காக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒருமுறை ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கவும் வழிவகைகள் செய்யப்பட்டு; அனைவருக்கும் தேவையான முன் அறிவிப்பு கொடுக்கப்பட்டு, இதுவரை 759 குடும்பங்களுக்கு மாற்றுக் குடியிருப்புகள் வழங்கப்பட்டுள்ளன. அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ள அனைத்துக் குடும்பங்களுக்கும் உரிய மாற்றுக் குடியிருப்புகள் வழங்கிட உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ளது. எனவே, ஒருசில எதிர்க்கட்சிகள் குறை கூறுவதைப் போல முன் அறிவிப்பின்றி திடீரென்று குடிசைகள் அகற்றப்படவில்லை.

சென்னை – ஒக்கியம் துரைப்பாக்கம் கண்ணகி நகரில் அடிப்படை வசதிகள் எதுவும் செய்து தரப்படவில்லை என்று சொல்லப்படுவதில் எவ்வித உண்மையும் கிடையாது. கண்ணகி நகரில் 5 நியாயவிலைக் கடைகள் அமைத்து தரப்பட்டுள்ளன; 2 ஆரம்பப் பள்ளிகளும்; 1 நடுநிலைப் பள்ளியும்; 1 உயர்நிலைப் பள்ளியும்; 16 பாலர் பள்ளிகளும் தொடங்கப்பட்டு நடைபெற்று வருகின்றன; ஒரு மருத்துவமனை உருவாக்கப்பட்டுள்ளது; ஒரு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது; 435 தெரு விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன; புறக்காவல் நிலையம் ஒன்று இயங்கி வருகிறது; நாள்தோறும் 20 இலட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்படுகிறது; பேருந்து நிலையம் ஒன்று அமைக்கப்பட்டு, நாள்தோறும் நகரின் பல்வேறு பகுதிகளுக்கும் 220 தடவை பேருந்துகள் இயக்கப்படுகின்றன; குப்பைகளை உரமாக மாற்றும் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது; மாதந்தோறும் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கண்ணகி நகருக்குச் சென்று அங்கு வாழும் மக்களின் குறைகளைக் கேட்டு, நிவர்த்தி செய்து வருகிறார்; இதைப் போலவே செம்மஞ்சேரியிலும் தேவையான அடிப்படை வசதிகள் உருவாக்கப்பட்டு நடைமுறையில் இருந்து வருகின்றன. இவ்வளவு வசதிகளும் உருவாக்கப்பட்டிருக்கும்போது, எந்தவிதமான அடிப்படை வசதிகளும் செய்து தரப்படவில்லை என்று குறை கூறுவது வேண்டுமென்றே இட்டுக்கட்டி திசை திருப்புவதற்காக சொல்லப்படுவதாகுமே தவிர, அதில் உண்மை கிஞ்சிற்றும் இல்லை என்பதை அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் நன்கு அறிவார்கள்.

வெளியீடு:

இயக்குநர், செய்தி, மக்கள் தொடர்புத் துறை, தலைமைச்செயலகம், சென்னை–9

* * *